## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 378/2017 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 3 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. அய்யாகுட்டி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of October 2022.

நான் பூலத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய மனைவி, அ.சா.2 எனது மகன். ஆஜா் எதிரிகளை தெரியும் எனது மனைவியின் உறவினா்கள். கடந்த 24.08.2017 ஆம் தேதி மதியம் 12.00 மணியளவில் எங்களுடைய இடத்தில் வானம் தோண்டி வேலை நடந்து கொண்டிருந்தது அப்போது ஆஜா் எதிரிகள் எனது அப்பா வீட்டு இடம் என்றும் அங்கு வீடு கட்ட கூடாது என்று அ.சா.1 ஆன எனது மனைவியிடம் பிரச்சனை செய்தாா்கள்.

பின்னா் ஆஜா் எதிரிகள் எனது மனைவியின் மாராப்பை இழுத்து, கெட்ட வாா்த்தை பேசி, கையால் முதுகு மற்றும் செவிட்டில் அடித்து வானம் தோண்டும் பள்ளத்தில் தள்ளவிட்டாா்கள். அதனால் எனது மனைவிக்கு ஊமை காயம் ஏற்பட்டது. பின்னா் எனது மகன் அ.சா.2, அ.சா.1 யை பள்ளத்தில் இருந்து தூக்கினான். அப்போது செல்வி, குறைதீா்த்த குமரனும் எதிரிகளை பாா்த்து சத்தம் போட்டாா்கள். அப்போது எதிரி சரஸ்வதி என்பவா் எனது மனைவி அ.சா.1 யை கொலை செய்துவிடுவதாக மிரட்டினாா்.

பின்னா் அ.சா.2, எனது மனைவி அ.சா.1 யை காவல்நிலையம் அழைத்துசென்று புகாா் அளித்தாா். பின்னா் மருத்துவனைக்கு அழைத்து சென்றாா். போலிசாா் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தாா்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவ இடம் குறித்து எங்களுக்கும் எதிரிகளுக்கும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு எதுவும் இல்லை. சம்பவ நடந்த நேரத்தில் நான் கீறிபாறை எஸ்டேட்டில் வேலை பாா்த்தீா்கள் என்றால் சாியல்ல நான் வீட்டில் தான் இருந்தேன். எனது மனைவயிடம் ஆஜா் எதிரிகள் சண்டையிடும் போது நான் வீட்டில் தான் இருந்தேன்

என்றால் சரிதான். சம்பவ பற்றி எனக்கு தகவல் சொன்னது யார் என்றால் சத்தம் கேட்டது அதனால் நான் வீட்டில் இருந்து வெளியே வந்தேன்.

சம்பவத்தின் போது எனது மகன் கல்லூரியில் இருந்தார் என்றால் எனது மகன் கல்லூரி படிப்பை முடித்துவிட்டான் அன்றைய தினம் கல்லூரி செல்லவில்லை. என்னையோ, அ.சா.2 ஆன எனது மகனையோ ஆஜர் எதிரிகள் கெட்ட வார்த்தை பேசி, மிரட்டினார்களா என்றால் சரிதான். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். சம்பவ இடத்தில் இருந்து அ.சா.2 எனது மனைவியை சுமார் 03.00 மணியளவில் மருத்துவமனை அழைத்து சென்றார்.

காவல்நிலையத்திற்கு, மருத்துவமனைக்கு நான் உடன் செல்லவில்லை. அ.சா.1 க்கு ஊமை காயம் மட்டும் தான் இருந்தது என்றால் சரிதான். எதிரி சரஸ்வதி சம்பவ தினத்தன்று 100 நாட்கள் வேலைக்கு சென்றார் என்றால் அவர் 100 நாட்கள் வேலைக்கு செல்வார் அன்றைய தினம் செல்லவில்லை. சம்பவத்தை நான் 15 அடி தூரத்தில் இருந்து பார்த்தேன். சம்பவத்தின் போது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், எனது மனைவிக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 378/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 2<br>Defense<br>Court |
| Name | திரு. இசக்கியப்பன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of October 2022.

நான் பூலத்தில் வசித்து வருகிறேன். ரயில்வேயில் ஒப்பந்த பணியாளராக வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய தாயார். ஆஜர் எதிரிகளை தெரியும் உறவினர்கள். கடந்த 24.08.2017 ஆம் தேதி சுமார் மதியம் 12.00 மணியளவில் எங்களுடைய நிலத்தில் வீடுகட்டுவதற்காக பவுண்டேஷன் தோண்டும் வேலை நடந்து கொண்டிருந்தது. அப்போது ஆஜர் எதிரிகள் அங்கு நின்று கொண்டிருந்த எனது தாயாரிடம் மேற்படி வானம் தோண்டும் இடம் எங்களுக்கு சொந்தமானது என்று கூறி அத்துமீறி எனது தாயாரிடம் பிரச்சனை செய்தார்கள்.

அதற்கு எனது தாயரான அ.சா.1 வானம் தோண்டும் இடத்தை 14 வருடத்திற்கு முன்பாக நாங்கள் வாங்கிவிட்டோம் இப்போது வந்து பிரச்சனை செய்தால் என்ன அர்த்தம் என்று கேட்டார். அதற்கு ஆஜர் எதிரிகள் என் அம்மாவை பார்த்து தேவடியா, செறுக்கு என்று ஏசினார்கள். பின்னர் ஆஜர் எதிரிகள் என் அம்மாவின் சேலை மாராப்பை பிடித்து இழுத்து அடித்து வானம் தோண்டிய பள்ளத்தில் தள்ளிவிட்டார்கள்.

அதனால் எனது அம்மாவிற்கு வலது கையில் காயமும் மற்றும் உள் காயமும் ஏற்பட்டது எனது அம்மாவை நான் பள்ளத்தில் இருந்து தூக்கிவிட்டேன். அக்கம்பக்கத்தில் இருந்த நபர்கள் ஆஜர் எதிரிகளை பார்த்து சத்தம் போட்டார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் எங்களை பார்த்து எனது மகன் மீது கொலை வழக்கு உள்ளது நீ எப்போது வீடு கட்டினாலும் எனது மகனை வைத்து கொன்றுவிடுவதாக கூறிவிட்டு ஆஜர் எதிரிகள் சென்றுவிட்டார்கள்.

ஆஜர் எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்ததால் மூன்றடைப்பு காவல்நிலையத்திற்கு சென்று நடந்த விபரத்தை கூறினேன் அப்போது புகார் எழுதி கொடுக்க சொன்னார்கள். எனது அம்மா கூறகூற நான் புகார் எழுதினேன். பின்னர் காவல்நிலையத்தில் அறிவுறுத்தலின் பேரில் நான் எனது அம்மாவை நான்குநேரி அரசமருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து

சென்றேன். இந்த வழக்கு சம்பவத்தை சிவசெல்வி மற்றும் குறைதீர்த்த குமரன் ஆகியோர்கள் பார்த்தார்கள். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவ இடம் குறித்து எங்களுக்கும் எதிரிகளுக்கும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு எதுவும் இல்லை. சம்பவ இடத்தில் சம்பவ தேதிக்கு முன்பாக வானம் தோண்டி வேலை ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல சம்பவ தினம் அன்று தான் வானம் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. சம்பவ தினத்தன்று காலை சுமார் 9 மணியளவில் வானம் தோண்டும் வேலை ஆரம்பித்திருப்பார்கள்.

வானம் தோண்டும் பணி ஆரம்பிக்கும் போது நான் சம்பவ இடத்தில் இருந்தேன். எதிரி சரஸ்வதி சம்பவ தினத்தன்று 100 நாட்கள் வேலைக்கு சென்றார் என்றால் அவர் 100 நாட்கள் வேலைக்கு செல்வார் அன்றைய தினம் செல்லவில்லை. சம்பவ நடைபெற்ற போது என்னையும் அ.சா.1 யையும் தவிர எனது தந்தை, சிவசெல்வி, குறைதீர்த்த குமரன் மற்றும் சிலர் இருந்தார்கள் மற்ற நபர்கள் பெயர் பதற்றத்தில் தெரியாது.

வானம் தோண்டும் பணி ஆரம்பிக்கும் போதிலிருந்தே எனது தாயார் மற்றும் தந்தையும் சம்பவ இடத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் வானம் தோண்டும் இடத்தில் இல்லை என்றால் சரியல்ல நானும் இருந்தேன். ஆஜர் எதிரிகள் என்னிடம் பிரச்சனை செய்தார்களா என்றால் பெண்கள் இடையே பிரச்சனை என்பதால் நான் தலையீடவில்லை. எனது தாயார் கால் இடறி வானம் தோண்டிய பள்ளத்தில் விழுந்தார் என்றால் சரியல்ல ஆஜர் எதிரிகள் எனது தாயாரை அடித்து மாராப்பை இழுத்து கீழே தள்ளிவிட்டார்கள்.

காவல்நிலையத்திற்கு நானும் எனது அம்மாவும் சென்றோம். எனது அப்பாவிடமும், என்னிடமும் ஆஜர் எதிரிகள் தகராறு செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் காவல்நிலையத்திற்கு செல்வதற்கு முன்பாக சம்பவ இடத்திற்கு போலிசார் வந்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. காவல்நிலையம் சென்று நான் தான் புகாரை கைபட எழுதினேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் நான் புகார் எழுதி கொடுக்கும் போது ஆஜர் எதிரிகளை போலிசார் கைது செய்து காவல்நிலையம் அழைத்துவந்தார்கள் என்றால் சரியல்ல ஆஜர் எதிரிகள் அப்போது வரவில்லை.

சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையம் வர சுமார் கால்மணி நேரம் ஆகும். காவல்நிலையத்தில் மதியம் 1.30 மணிக்கு தான் புகார் அளிதோம் என்றால் 01.00 மணிக்கு காவல்நிலையம் வந்து விட்டோம் புகார் எழுதி கொடுக்கும் போது நேரம் ஆகிவிட்டது. காவல்நிலையத்தில் புகார் அளித்த பின்பு எனது தாயாரை நான் மருத்துவமனை அழைத்து சென்றேன். எனது தாயார் மருத்துமவமனையில் சிகிச்சை அளித்தார்கள் ஆனால் உள்நோயாளியாக அனுமதிக்கபடவில்லை.

சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும், எனது தாயாரை மருத்துவமனை அழைத்துசெல்லவில்லை என்றும், அ.சா,1 தாயார் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிவசெல்வி, குறைதீர்த்த குமரன் எனது உறவினர் என்றால் சரிதான். நான் சொல்வது போல எதிரிகள் எனது அம்மாவை கெட்ட வார்த்தையில் பேசவில்லை, அடிக்கவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த நேரத்தில் கல்லூரியில் மூன்றாமாண்டு படித்து கொண்டு கல்லூரியில் இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**